**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. 1 COURT, NAMAKKAL.**

**STC.No. 1637/2022**

**PW - 1**

| **PW. 1 Cross continuation** | ஜோதிலிங்கம் த/பெ.கிருஷ்ணன் | 13.11.2024 |
|---|---|---|

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the Date: 13.11.2024

**(எதிரி ஆஜர்)**

**விசாரணை தொடங்கிய நேரம் மதியம் 03.39 மணி**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (எதிரி தரப்பில்) :–**

5) நான் வியாபாரம் நடத்தி வரும் வகையில் வரவு செலவிற்கு காசோலை கொடுக்கும் வழக்கம் உள்ளதா என்றால் இல்லை. இந்த வழக்கு தொடர்புடைய காசோலையும், மற்றொரு வழக்கான STC.1675/2022 என்ற வழக்கில் சம்மந்தப்பட்ட காசோலையும் எந்த தேதியில் எதிரி எனக்கு வழங்கினார் என்றால் 02.07.2022 ம் தேதி ரூ.6 லட்சத்திற்கு ஒரு காசோலையும், மற்றொரு காசோலையை ரூ.4 லட்சத்திற்கும் வழங்கினார். இந்த வழக்கில் எனக்கு கொடுத்த ம.சா.ஆ.1 காசோலையில் Account Payee என்று சீல் வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் இந்த வழக்கு தொடர்புடைய மற்றொரு வழக்கான STC.1675/2022 என்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 474 என்ற எண் கொண்ட காசோலையில் Account Payee என்று சீல் வைக்காமல் இரண்டு குறுக்கு கோடு தான் போடப்பட்டுள்ளது என்றால் அதனை நான் பார்க்கவில்லை.

6) இரண்டு காசோலைகளும் என்னிடம் ஒரே நாளில் கொடுத்தது உண்மை என்றால் இரண்டு காசோலைகளிலும் ஒரே மாதிரியான Account Payee அடையாளம் இடப்பட்டிருக்கும், அவ்வாறு இல்லாததால் இரண்டு காசோலைகளும் வெவ்வேறு தேதியில் தான் எனக்கு கிடைக்கப்பட்டிருக்கும் என்று சொன்னால் சரியல்ல. ஒரே நாளில் இரண்டு காசோலைகளை வழங்குகின்ற பொழுது ஒரே காசோலை புத்தகத்தில் இருந்து இரண்டு காசோலைகள் வழங்கப்படுவது தான் வழக்கம், ஆனால் இரண்டு காசோலை எண்கள் 399 STC.NO.1637/2022 மற்றும் STC No.1675/2022 என்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலை எண்.474 என்பதால் இரண்டு காசோலைகளும் ஒரே புத்தகத்தில் இருந்தும், ஒரே நாளிலும் கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்று சொன்னால் சரியல்ல, எதிரி காசோலை புத்தகத்துடன் வரவில்லை எனது வீட்டிற்கு இரண்டு காசோலைகளை மட்டும் எடுத்து வந்து கொடுத்து சென்றார்.

7) மேற்படி காசோலையில் எனது முன்பாக எதிரி கையொப்பம் செய்தாரா என்றால் இல்லை. காசோலையில் தொகைமற்றும் தேதியை எழுதியது யார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. இந்த காசோலை வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தவற்கு முன்பாக வேறு எங்கு புகார் மனு கொடுத்திருந்தேனா என்றால் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் 11.07.2022 ம் தேதியிட்ட மாவட்ட ஆட்சி தலைவரிடம் கொடுக்கப்பட்ட புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள 9443973852 என்ற தொலைபேசி எண் யாருடையது என்றால் என்னுடையதுதான் ஆகும். மேற்படி புகார் மனுவில் இடம்பெற்றுள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் ஆமாம்.

8) மேற்படி புகார் மனுவை மாவட்ட ஆட்சி தலைவரிடம் எதற்காக கொடுத்தேன் என்றால்எனது மகள் மற்றும் மனைவி மாற்றுதிறனாளி என்பதால் மாவட்ட ஆட்சியர் அலவகம் சென்றபோது எதிரி பலமுறை பணம் கொடுக்காததால் மேற்படி புகாரை எழுதிக்கொடுத்தேன், ஆனால் அவர்கள் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு அனுப்பி அங்கிருந்து விசாரணைக்காக அனுப்பப்ட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருப்பதால் மேற்படிபுகார் மனுவை தள்ளுபடி செய்துவிட்டனர். எதிரிக்கு எந்த தேதியில் பணம் கொடுத்தாக மேற்படி புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் அதுகுறித்து ஞாபகம் இல்லை. எதிரி 01.05.2018 ல் ஒரு காசோலையும், 01.10.2018 ல் ஒரு காசோலையும் எனக்கு வழங்கினாரா என்றால் வழங்கினார். மேற்படி தேதியில் எதிரி கொடுத்த காசோலையை தான் வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த காசைசோலையை பெற்றுக்கொண்டு இந்த வழக்கின் காசோலையை கொடுத்தார். மேற்படி இந்த காசோலையானது மேற்படி தொகைக்காகதான் வழங்கப்பட்டதா என்றால் ஆமாம்.

9) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கொடுத்த புகார் மனு குறித்தும், அந்த புகார் மனுவில் குறிபிட்டுள்ளவாறு எதிரி கொடுத்த காசோலைகளை திரும்ப பெற்றுக்கொண்டு வேறு காசோலை வழங்கியதாக சொல்லியுள்ள விவரத்தை இந்த வழக்கிலும், மற்றொரு வழக்கிலும் கொடுக்கப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பிலும், புகார் மனுவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த புகார் மனு குறித்து எந்த தேதியில் எதிரியிடம் சொன்னேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை, ஆனால் நேரில் சொன்னபோது 02.07.2022 ல் இரண்டு காசோலைகள் எண்.399 மற்றும் 474 எண் கொண்ட காசோலைகளை எதிரி என்னிடம் வழங்கினார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது**.

**மறு விசாரணை – இல்லை.**

(விசாரணை முடிவுற்ற நேரம்:– மதியம் 04.04 மணி )